16 DEC 2019

சுருக்கம்

பொதுப்பணிகள்— தமிழ்நாடு அமைச்சுப்பணி— நீலகிரி மாவட்ட வருவாய் அலகு— திருமதி ரஹ்மத் நிஷா (க/பெ காலஞ்சென்ற திரு.ஏ.எஸ்.அப்துல் ரஹ்மான்) கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது— பணிவரன்முறை செய்தல்— ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பணிகள் அலகு, பணி9 (3) பிரிவு

அரசாணை (3டி) எண்: 314

நாள்: 29.11.2019
திருவள்ளுவராண்டு 2050
விகாரி, கார்த்திகை – 13

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு3/10164/2019, நாள் 31.05.2019.
3. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் கடித ந.க.எண்.அ3/22166/2018, நாள் 17.09.2019.

******

ஆணை:

நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், தனிவட்டாட்சியராகப் பணியாற்றிய போது 01.10.2018 அன்று பணியிடையே காலமான திரு.ஏ.எஸ்.அப்துல் ரஹ்மான் என்பவரின் மனைவி திருமதி ரஹ்மத் நிஷா என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால், நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு, தனியர் 31.12.2018 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திருமதி ரஹ்மத் நிஷா என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 31.12.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய ஆணை வேண்டி நீலகிரி மாவட்ட ஆட்சியர், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையருக்கு முன்மொழிவு அனுப்பியிருந்தார்.

2. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவினை கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

3. நீலகிரி மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை ஆகியவற்றை உரிய

த.பி.பா

Scanned with CamScanner

ஆவணங்களுடன் அரசு நன்கு ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகத் தற்காலிகப் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி ரஹ்மத் நிஷா என்பவருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 31.12.2018 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறைசெய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 20652/க்யூ–2/2019–1, நாள் 15.11.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.38313/ஜி2/2019–1, நாள் 26.11.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

அதுல்ய மிஸ்ரா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், நீலகிரி மாவட்டம்.
திருமதி ரஹ்மத் நிஷா, இளநிலை வருவாய் ஆய்வாளர்.
(நீலகிரி மாவட்ட ஆட்சியர் மூலமாக)

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஜி) துறை, சென்னை–9.
மாநில கணக்காயர்(RAO), சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

ஆ.கே. [signature]
பிரிவு அலுவலர். 29.11.19.

ந.க.அ3/22160/2018 நாள்: .01.2020

2) அசல் சம்பந்தப்பட்ட நபருக்கு சார்பு செய்யப்பட்டது.

[signature] 04/01/2020
மாவட்ட ஆட்சியருக்காக, நீலகிரி மாவட்டம்.

பெறுநர்: சம்பந்தப்பட்ட நபர்.

[signature] /01/2020

Scanned with CamScanner

நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,

ந.க.அ3/22160/2018 நாள்:28.12.2018

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் - கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய – திருமதி.ரஹ்மத்நிஷா, க.பெ.அப்துல்ரஹிமான்(லேட்) என்பவருக்கு – இளநிலை வருவாய் ஆய்வாளராக பணி நியமனம் வழங்கி - ஆணை.

படிக்கப் பட்டவை:
1. திருமதி.ரஹ்மத்நிஷா, க.பெ.அப்துல்ரஹிமான்(லேட்), க.எண்.175, ஜெயில்ஹில் அரசு குடியிருப்பு, உதகை என்பவரின் மனு நாள்:22.10.2018.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:22.10.2018.
3. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்:07.12.2018.
4. உதகை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் உதகை கடிதம் எண்.ந.க.எச்2/5050/2018, நாள்:14.11.2018 மற்றும் 18.12.2018.
5. உதகை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கடிதம் எண்.ந.க.எண்.5162/அ3/2018, நாள்:17.12.2018.
6. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்கக, இணை இயக்குநர் (பணியாளர்) கடிதம் எண். ஓ.மு.எண்.295549/வி4/2018, நாள்:19.12.2018.
7. கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண்.ந.க.பணி4(1)/5161/2014, நாள்:01.07.2014.

<<<< >>>>

**ஆணை:**

பார்வை-5இல் காணும் சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தின்படி நீலகிரி மாவட்ட வருவாய் அலகிற்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கு 06 பணியிடம் ஒப்பளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி நீலகிரி மாவட்ட வருவாய் அலகில், உதகை மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில் தனி வட்டாட்சியர் (நில எடுப்பு)ஆக பணிபுரிந்து பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.ஏ.எஸ்.அப்துல்ரஹிமான்(லேட்) என்பவர் கடந்த 01.10.2018 அன்று காலஞ்சென்ற நிலையில் அவரது மனைவி திருமதி.ஏ.ரஹ்மத்நிஷா என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற தகுதி பெற்றுள்ளார். மேலும், தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிபுரிய சம்மதம் தெரிவித்துள்ளதால், திருமதி.ஏ.ரஹ்மத்நிஷா என்பவருக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 'க்யூ' பிரிவில் இளநிலை வருவாய் ஆய்வாளராக காலியாக உள்ள பணியிடத்தில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. மேலும், பணியில் இணையும்பொழுது உடற்தகுதி சான்று மற்றும் வேலைவாய்ப்பு அடையாள அட்டையினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு தனியர் அறிவுறுத்தப்படுகின்றார்.

ஒம்/-ஜெ. இன்னசென்ட் திவ்யா,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

பெறுநர்
திருமதி.ஏ. ரஹ்மத்நிஷா,
க/பெ.ஏ.எஸ்.அப்துல்ரஹிமான்(லேட்)
க.எண்.175,
ஜெயில்ஹில் அரசு குடியிருப்பு,
உதகை வட்டம், நீலகிரி மாவட்டம்.

Scanned with CamScanner

நகல்: மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (பொது), உதகை.
நகல்: மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியர் (கணக்குகள்), உதகை.
நகல்: மாவட்ட ஆட்சியரின் முகாம் உதவியர், உதகை.
நகல்: மாவட்ட வருவாய் அலுவலரின் முகாம் உதவியர், உதகை.
நகல்: உபரி (2).

/உ.ந.உ.ப./

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.

Scanned with CamScanner